**செய்தி வெளியீடு எண்: 846** **நாள்: 17.11.2018**

**<u>இன்று (17.11.2018), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், வனவாசியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

நான் ஏற்கனவே, இதே இடத்தில், கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு முன்பு, நீங்கள் வைத்த கோரிக்கை நிறைவேற்றுகின்ற விதமாக, நீண்ட நாட்களாக இந்த சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மாணவ, மாணவிகளின் கோரிக்கையின் அடிப்படையிலே, ஒரு பால்டெக்னிக் கல்லூரியை திறந்து வைத்து இந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி பயிலக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ளோம்.

2011–ல் நான் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டபொழுது குடிநீர் பிரச்சினையை சுட்டிக்காட்டினீர்கள், பிறகு, 2016–லும் இதைச் சுட்டிக்காட்டினீர்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் 2011–ல் இங்கே ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். 2011–2016 இடைப்பட்ட காலத்தில் மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் அண்ணன் கே.பி. முனுசாமி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் அவரை அழைத்து மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தை சகோதரர் எடப்பாடி பழனிசாமி கேட்கின்றார், அதை நிறைவேற்றி உடனடியாக ஆணை பிறப்பியுங்கள் என்று அவரிடத்திலே சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க அப்பொழுதே அந்தப் பணி துவங்கப்பட்டது. ஆகவே, இந்தப் பணி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. ஏனென்று சொன்னால், இந்த

மண்ணிலிருந்து மறைந்தாலும் அவர்களுடைய திட்டங்களை இப்பொழுதும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அம்மா அவர்களிடம் சொன்னவுடன், கிட்டத்தட்ட ரூபாய் 158 கோடி இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கி கிட்டத்தட்ட 698 இடங்களில் tank கட்டி 698 குடியிருப்புப் பகுதி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி நீரை என்றைக்குமே இல்லை என்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். ஒரு நிலையான கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். மேட்டூர், எடப்பாடி என 6 பேரூராட்சிகளை உள்ளடக்கி இந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

நான் வந்தவுடன் சாலைகளை விரிவுபடுத்தி சீர் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அனைத்து சாலைகளும் சீர் செய்யப்பட்டு விட்டது. உள்ளாட்சி சாலைகளை சீர் செய்யும் பணிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. படிப்படியாக அனைத்து ஊராட்சிகளில் இருக்கின்ற ஊராட்சி சாலைகள் சீர் செய்யப்படும்.

போக்குவரத்து வசதி வேண்டுமென்று வைத்த கோரிக்கைகளுக்கு அனைத்து ஊர்களுக்கும் பேருந்து வசதி கொடுத்த ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி. அதேபோல ஆரம்ப சுகாதர நிலையங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து வசதிகளையும் அம்மா அரசு நிறைவேற்றி தந்திருக்கின்றோம்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 17 இலட்சம் மதிப்பீட்டில் தாராபுரம் ஊராட்சி மணியக்காரன்பாளையத்தில்,

குட்டப்பட்டு ஊராட்சியிலும் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு அங்கன்வாடி மைய கட்டடம், தாய்த் திட்டம்–2ன் கீழ் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் குட்டப்பட்டு மற்றும் கலிக்காப்பட்டி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள 2 புதிய அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 புதிய அம்மா பூங்காக்களும், ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் கலிக்காப்பட்டியில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், பாராளுமன்ற உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 8,75,000 மதிப்பீட்டில் எடப்பாடி நெடுங்குளம் ஊராட்சி கோனேரிப்பட்டியில் கட்டப்பட்டுள்ள புதிய சுகாதார வளாகமும் மற்றும் எடப்பாடி நகராட்சியின் வார்டு எண் 6, 8, 12, 18, 19 மற்றும் 21 ஆகிய 6 இடங்களில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிமெண்ட் சாலை மற்றும் குப்பைகள் சேகரிக்கும் மையம் கட்டும் பணியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் உள்கட்டமைப்பு முகமை நிதியிலிருந்து ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் எடப்பாடி நகராட்சி பேருந்து நிலையம் அருகில் மேற்கொள்ளப்பட்டுள்ள பூங்கா மேம்பாட்டுப் பணியும், கூட்டுறவுத் துறையின் சார்பில் கச்சப்பள்ளி பகுதிகளில் போன்ற பகுதியில் சுமார் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க புதிய அலுவலகக் கட்டடமும், பால்வளத் துறையின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நடுப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடமும் இன்றைக்கு திறக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் வெள்ளக்கோவில் ஊராட்சியில் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகமும், கூட்டுறவுத் துறையின் சார்பில் வெல்லாண்டிவலசில் சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடியும் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் 6,842 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 2,31,53,000 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படுகின்றன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கும், தூய்மைப் பார்வை இயக்கத்தின் சார்பில் 100 பயனாளிகளுக்கு தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டுவதற்கும் என மொத்தம் 200 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டிலான மானியத் தொகையும், மகளிர் திட்டம் சார்பில் 40 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு பாதுகாப்பு நிதி உதவியும், 19 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு சுழல் நிதியும், 145 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் என மொத்தம் 244 பயனாளிகளுக்கு ரூபாய் 51,65,000 நிதியுதவியும், வருவாய்த் துறையின் சார்பில் 345 பயனாளிகளுக்கு ரூபாய் 52,62,500 மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டா, நத்தம் நிலவரித் திட்டப் பட்டா, கல்வி உதவித் தொகை, இயற்கை மரண நிதியுதவி, முதியோர் உதவித் தொகை, விபத்து நிவாரண நிதி உதவி, முதிர்க்கன்னி உதவித் தொகை, திருமண நிதி உதவி, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, விதவை உதவித் தொகை மற்றும் புதிய குடும்ப அட்டைகள் உள்ளவைகளும் மற்றும் வேளாண்மைத் துறை சார்பில் 51 விவசாயிகளுக்கு ரூபாய் 49,800 மதிப்பீட்டில்

சிறு தானியங்ங்ள், உயிர் உரங்கள், நுண்ணோட்டம் மற்றும் விதைகள், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 40 விவசாயிகளுக்கு ரூபாய் 14,27,300 மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனக் கருவி, நிலப் போர்வை, கத்தரி, தக்காளி, வெங்காயம், பருப்பு வகைகளுக்கு மானியம், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் வாங்கும் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரகள் மற்றும் கருவிகள் வாங்க 5 நபர்களுக்கு ரூபாய் 2,86,600 மானியம், கூட்டுறவுத் துறையின் சார்பில் 150 நபர்களுக்கு ரூபாய் 64,90,000 மதிப்பீட்டில் மத்திய காலக் கடனுதவி மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக் கடனுதவியும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் ரூபாய் 75 ஆயிரம் மதிப்பீட்டில் 10 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரம், 5 பயனாளிகளுக்கு விலையில்லா சலவைப் பெட்டிகள், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ், தொழில் துவங்க 1 பயனாளிக்கு ரூபாய் 1 இலட்சத்து 25 ஆயிரம் மானியமும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறையின் சார்பில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் மூன்றாம் தவணைத் தொகையாக ரூ. 4000–மும், ஆதிதிராவிட நலத் துறையின் சார்பில் ஒரு பயனாளிக்கு ரூ.10000 மதிப்பீட்டான இலவச வீட்டுமனை பட்டாவும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் சார்பில் ஒரு மாற்றுத் திறனாளிக்கு ரூ. 50,000 திருமண உதவியுடன் தாலிக்கு 8 கிராம் தங்கமும் என மொத்தம் 7,248 பயனாளிகளுக்கு ரூபாய் 6 கோடியே 2 லட்சத்து 96 ஆயிரத்து நூறு மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில், நிறைய திட்டங்கள் எடப்பாடி தொகுதியில் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். சவுரியூரில் ஆரம்ப சுகாதார நிலையம், கோணேரிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம், பக்கநாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம், சமுத்திரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம். ஆகவே, கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் நோய்வாய்ப்பட்டால் அங்கேயே சிகிச்சை செய்வதற்காக இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை அம்மாவினுடைய அரசு குறுகிய காலத்தில் தொடங்கி, இன்றைக்கு மக்களெல்லாம் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

ஏற்கனவே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்பட்டு, அந்த சுகாதார நிலையத்தில் இருக்கின்ற மருத்துவர்கள் அதிகரித்திருக்கிறார்கள். அந்த மருத்துவமனையிலே கூடுதல் கட்டிடங்கள் 1 கோடி ரூபாயில் கட்டியிருக்கிறார்கள், நங்கவள்ளி, கொங்கணாபுரம், சித்தூர் ஆகிய இடங்களில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

கால்நடைகளுக்கு நோய்வாய்ப்பட்டால், அதற்கு சிகிச்சை அளிப்பதற்காக எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் 4 இடங்களில் கால்நடை மருத்துவமனை கட்டிக் கொடுத்திருக்கிறோம். விலையில்லா ஆடு 4512 பயனாளிகளுக்கு 5.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கியிருக்கிறோம்.

மானாவாரி மேம்பாடு திட்டத்தில், 144 விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித் திட்டத்தில் 1 கோடியே 53 இலட்சத்தில் 450 வளர்இளம் பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 2425 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு செய்யப்பட்டுள்ளது.

2011 முதல் தற்போது வரை 23,511 நபர்களுக்கு 65.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டிருக்கிறது. கிராமச்சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன. பக்கநாடு, தாராபுரம், தோடமங்கலம், நத்தக்காடு ஆகிய பகுதிகளில் 5 புதிய பாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. சுமார் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2016–2018, இரு ஆண்டுகளில் சுமார் 57 கிலோமீட்டர் நீளமுள்ள ஊராட்சி சாலைகள் மேம்படுத்தப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 5.50 கோடி மதிப்பீட்டில் வடகத்திக்காடு, வெள்ளாளபுரம் மற்றும் வடகரை வாய்க்கால், நரிமேடு ஆகிய பகுதிகளில் 3 புதிய பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றது. 4.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடப்பாடியில் 3 புதிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல எடப்பாடி புறவழிச்சாலை, எடப்பாடி தொகுதியில் ஐந்தாண்டுகளில் மட்டும் நெடுஞ்சாலைத் துறையில் மட்டும் 236 கிலோமீட்டருக்கு 140 கோடி ஒதுக்கீடு செய்து அந்த சாலைகளையெல்லாம் சீரமைத்துக் கொடுத்திருக்கிறோம். இந்தப் பணிகளெல்லாம் எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டில், இந்த மாவட்டத்தில் 93 கோடி ரூபாயில் 83 கிலோமீட்டர் சாலை மேம்படுத்தும் பணியும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. என்னுடைய எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, எடப்பாடி சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் 13 அங்கன்வாடி கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம், 13 பயணநிழற்குடை கட்டிக் கொடுத்திருக்கிறோம், 19 கான்க்ரீட் சாலைகள் அமைத்துக் கொடுத்திருக்கிறோம், 18 பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்திருக்கிறோம், பள்ளிக் குழந்தைகள் மிதிவண்டிகளை நிறுத்துவதற்காக 16 மிதிவண்டி நிறுத்தும் இடம்

கட்டிக் கொடுத்திருக்கிறோம், 8 கழிவுநீர் வாய்க்கால் கட்டிக் கொடுத்திருக்கிறோம், 4 நூலக கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம், 7 பல்நோக்கு மைய கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். பல்வேறு இடங்களில் குடிநீர் பிரச்சினையைப் போக்க 60 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கிறது, எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் 42 நியாய விலைக் கடைகளுக்கு கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அங்கன்வாடிகளை சமையல் செயவதற்காக 90 சதவீத அங்கன்வாடிகளுக்கு எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பும் கொடுத்திருக்கிறோம், 11 பொது சுகாதார வளாகங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம், 16 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி என்னுடைய நிதியிலிருந்து கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 2168 பசுமை வீடுகள், 272 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள், 1149 குடியிருப்புகள். இப்படி பல்வேறு திட்டங்களை அம்மாவின் அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

7 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியிருக்கிறோம். எடப்பாடியில் அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிக் கொடுத்திருக்கிறோம். வனவாசியில் பாலிடெக்னிக் கல்லூரி, எட்டிக்குடைமேட்டில் பி.டெக் வர இருக்கின்றது, எட்டிக்குடைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டைக்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, பணிகளை துவங்கியிருக்கிறோம். நான் இந்தத் திட்டத்தையெல்லாம் அறிவித்ததன் காரணத்தினால் எடப்பாடி தொகுதி நன்றாக வளர்ந்து வருகிற ஒரு தொகுதியாக இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடி, கொங்ணாபுரம், மகுடஞ்சாவடி ஒன்றியங்களில் கூட்டுக்குடிநீர் திட்டம் பணி முடிவடைந்து அம்மாவின் திருக்கரங்களால் திறக்கப்பட்டது. எடப்பாடி நகரத்திற்கு கூட்டுக்குடிநீர் திட்டமும் அம்மாவின் திருக்கரங்களால் திறக்கப்பட்டது. ஆகவே, எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் தங்குதடையில்லாமல் நிலையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதையும், மேலும், நீங்கள் கொடுத்திருக்கின்ற அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நங்கவள்ளியிலிருந்து செல்லும் வழியில் உள்ள 4 ரயில்வே கிராஸிங் வரும் இடத்தில் உயர்மட்டப் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.செம்மலை அவர்களது கோரிக்கையின் அடிப்படையில், மேட்டூரில் பெரிய கிணறு வெட்டி, பெரிய பைப்லைன் போடும் பொருட்டு 7.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பணி துவங்கப்பட்டுவிட்டது. மேச்சேரியிலிருந்து தோப்பூர் வரையுள்ள சாலையை சீரமைப்பதற்காக 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமத்திலிருந்து நகரம் வரை எல்லா சாலைகளும் சீர்செய்து, அனைத்து பகுதிகளிலும் சாலைகளெல்லாம் சிறப்பான சாலையாக அமைத்துக் கொடுத்திருக்கிறோம். அதோடு பேரூராட்சி பகுதிகளில் இருக்கும் சாலைகளும் சீரமைப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, நீங்கள் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கின்றார்கள். அம்மா மறைந்தாலும், அம்மாவினுடைய அரசு, அம்மா அறிவித்த அனைத்து திட்டங்களை நிறைவேற்றி இந்தப் பகுதி மக்களுக்கு காவிரி நீரை பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்பு இருந்த ஆட்சியாளர்கள் என்ன செய்தார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தான் இந்த ஆட்சியின் சிறப்பு உங்களுக்குத் தெரியும். அம்மாவின் அரசு உங்களுடைய அரசு, ஏழை, எளியவர்களின் அரசு, மக்கள் எண்ணுவதை நிறைவேற்றுகின்ற அரசு அம்மாவின் அரசு. எப்பொழுதும் அம்மாவின் அரசுக்கு நீங்கள் பக்கபலமாக இருக்கவேண்டும் என்று தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி,

வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**